# ஊழியத்தை குறித்த சில வரிகள்

# கர்த்தர் நல்லவர்

**1974 - ஆம் ஆண்டு**

**என் அம்மா சகோதரி . முத்தம்மாள் அவர்கள் நாகர்கோயில் கட்டையன்விளை மணவாட்டி சபை என்ற பெயரில் ஊழியத்தை ஆரம்பித்தார்கள்.**

**உண்ண உணவின்றி**

**உடுக்க வஸ்திரமின்றி தங்க ஸ்தலமின்றி மிகவும் கஷ்டத்தின் மத்தியில் ஊழியம் செய்து வந்தார்கள்.நல்ல கிருபை வரம் உடையவர்கள் கர்த்தர் அம்மாவை கொண்டு அநேக பிசாசுகளை துரத்தினர். அற்புதங்கள், அடையாளங்கள் நடந்தது. நல்ல தீர்க்கதரிசன வரம் உடையவர்கள்.**

**ஆரம்ப காலத்தில்**

**எட்டாமடையில் ஊழியம் செய்து வந்தார்கள். எனக்கு பன்னிரண்டு வயது இருக்கும் போது ஒரு பெரிய வியாதி வந்தது (படுமன்) இந்த வியாதி வந்தால் யாரும் பிழைக்க மாட்டார்கள் என்று மாராங்கோணத்தை சேர்த்த என் அத்தான் பெரிய வைத்தியர் சொன்னார்.**

அம்மாவோ! என் தலை மாட்டில் இருந்து எண்ணெய் பூசிஜெபிப்பார்கள். கர்த்தர் சுகம் தந்தார். அம்மா மிகவும் கண்டிப்பானவர்கள் இவர்கள் கண்டிப்பை  சமாளிக்க முடியாமல் நான் கொடைக்கானலில் மூன்று ஆண்டு சகோதரன். லாவன் என்கிற அண்ணனோடு  சில தொழில்கள் செய்து வந்தேன்.

1983 ஆம் ஆண்டு ஒரு பெரிய விபத்து எனக்கு ஏற்பட்டது. என் மூத்த சகோதரன் மூலமாக திருவனந்தபுரத்தில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் இருந்து சுகம் கிடைத்தது.

திரும்பி கொடைக்கானல் போகும் வழியில் நாகர்கோயில் வந்து அம்மாவிடம் சொல்லி ஜெபித்து போகலாம் என்று சொல்ல வந்தேன். இனி வேலைக்கு போகாதே உன்னை நான் ஊழியம் செய்ய ஒப்புகொடுத்தேன் என்றார்கள். நான் ஒப்புக்கொண்டேன். மறுபடியும்  அம்மாவோடு சேர்ந்து அம்மாவின் கீழ் இருந்து ஊழியம் செய்ய ஆரம்பித்தேன்.

1987 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் தேதி பெங்களூர் - பாஸ்டர் அருமை ராஜ் , கனி அம்மாள் அருமைராஜ்  இவர்கள் மகள் அன்பு ஏசுவடியாளை திருமணத்திற்கு ஏற்பாடு செய்து, திருமணம் செய்து வைத்தார்கள். கர்த்தர் இரண்டு பிள்ளைகளை தந்தார் மூத்த மகள் அக் ஷா ஷைனி மகன் அபிஷாய் சாம் அருமைராஜ். இரண்டு பிள்ளைகளுக்கும் கர்த்தர் நல்ல குடும்பங்களை கட்டி தந்தார். இரண்டு பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

1998 - ஆம் ஆண்டு

டிசம்பர் 7 தேதி அம்மா மறுமைக்குள் சென்றுவிட்டார்கள் .

தொடர்ந்து

ஊழியத்தை நானும் என் தம்பியும் குடும்பமாக செய்து வருகிறோம்

எங்களுக்காக ஊழியத்திற்காக ஜெபித்து கொள்ளுங்கள்.

Pr.Alson